**கவனிக்க** .- *2015.01.02 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1897 - 2015 ජනවාරි මස 09 වැනි සිකුරාදා - 2015.01.09**

*1897 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 18 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | - |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | – |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 18 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2015, சனவரி மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, சனவரி மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2015 இன் இல. 07*

எம்ஓடி/டிஈஎப்/03/02/வீஎன்எப்/பீஆர்ஓ.

**இலங்கை கடற்படை - தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
பதவி நிரந்தரமாக்குதல்

2014, ஒகத்து மாதம் 01 ஆந் திகதியிலிருந்து கப்ரின் (தொகப) ஆக:

கொமாண்டர் (தொகப) [தற்காலிக கப்ரின் (தொகப)] தொன் லால் டயிடஸ் கன்னன்கர, இதொகப - என்விஎக்ஸ 5082

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்திஅமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2014, செத்தெம்பர் 04.

1-335/ 2

*2015 இன் இல. 08*

எம்ஓடி/டிஈஎப்/03/02/வீஎன்எப்/பீஆர்ஓ.

**இலங்கை கடற்படை - தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
பதவி நிரந்தரமாக்குதல்

2014, ஒகத்து மாதம் 01 ஆந் திகதியிலிருந்து கொமாண்டர் (தொகப) ஆக:

லெப்டினனட் கொமாண்டர் (தொகப) [தற்காலிக கொமாண்டர் (தொகப)] மொஹொட்டிகே கபுருஹாமிகே சுனில் செனவிரத்ன, இதொகப - என்விஎக்ஸ 5192

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்திஅமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2014, செத்தெம்பர் 04.

1-335/ 1

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2014, நவெம்பர் 14 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது.

"பிலிமதலாவவில் கிறீன் பார்க் ரெஸ்டோரன்ட் என்ற பெயர்மகுடத்தின் கீழும் குழுமத்தின் கீழும் தனி உரிமையாண்மையில் தொழில் கொண்டு நடாத்துகின்ற பிலிமதலாவைச் சேர்ந்த "(கடன்பெறுநரான) காரியவசம் மஜுவன கமகே வசந்த லால் சேனாதீர என்பவர், தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் சார்பில் (வங்கி) பிரசித்த நொத்தாரிசு (திருவாட்டி) கே. ஏ. பீ. கஹந்தாவ என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011.12.30 ஆந் திகதிய 65 ஆம் இலக்க முறிமீது வருமதியான கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளதாதலாலும்,

அத்துடன் 2014, செத்தெம்பர் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஒரு கோடியே ஐம்பத்தேழு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து முந்நூற்று எழுபத்தேழு ரூபா (ரூ. 1,57,56,377) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறியின் மீது வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் வந்துள்ளதாதலாலும்,

வங்கியின் பணிப்பாளர் சபையானது திருத்தப்பட்டவாறான (பிரதான சட்டமான) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம்இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட ஒரு கோடியே ஐம்பத்தேழு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து முந்நூற்று ஏழுபத்தேழு ரூபா (ரூ. 1,57,56,377) கொண்ட தொகையையும் ஒரு கோடியே நாற்பத்திரண்டு இலட்சத்து எண்பத்தையாயிரத்து எழுநூற்று இருபது ரூபா (ரூ. 1,42,85,720) கொண்ட கூட்டு மொத்தப் பிரதான தொகை மீது 2014, ஒற்றோபர் 1 ஆந் நாளிலிருந்தான வட்டியையும், அல்லது ஒவ்வொரு மூன்று மாதகாலப்பகுதியும் சீராக்கப்படும் ஆண்டொன்றுக்கு ஏழு வீத (7%) வட்டியையும், சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதத்தில் (சஎபிகவீ) விற்பனை செய்யப்படும் நேரத்தில் சொல்லப்பட்ட முறிமீது வருமதியாக செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும் மற்றும் 2014, திசெம்பர் 1 ஆந் திகதி வரை நடைமுறை வட்டிக்காலப்பகுதிக்கு ஏற்புடையதாகும் வீதம் ஆண்டொன்றுக்கு 14.21 சதவீதமாதல் வேண்டும். அதன்பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனு மிருப்பின்) அவற்றைக் கழித்து, பிரதான சட்டத்தின் 13 ஆம்பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன்

சேர்த்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட முறி மூலம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் அவ்வாதனத்துக்கும் வளவுகளுக்குமான இறையிலி மற்றும் வேறு உரிமை, உரித்து மற்றும் அக்கறையுட்பட, உத்தரவுபெற்ற ஏலதாரர்களான திரு. பீ. கே. ஈ. சேனாபதி அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**மேலே குறிப்பீடு செய்யப்பட்ட ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில், யட்டிநுவரவின் மடபலாத்த கோறளையில் பிலிமதலாவவில் அமைந்துள்ள காணியிலிருந்து அஸ்வெத்துமே வத்த எனவழைக்கப்பட்ட காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. பி. லன்சகாரநாயக்க என்பவரினால், தயாரிக்கப்பட்ட 2011, திசெம்பர் 04 ஆந் திகதிய 7518 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்ட அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு: நானு ஓயா; கிழக்கு : 432 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 01; தெற்கு : கொழும்பிலிருந்து கண்டி வரையான பெருந்தெரு மற்றும் ; மேற்கு : 432 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 3 ; பரப்பளவில் இது, அதன்மீதுள்ள கட்டிடத்துடனும் எல்லாவற்றுடனும் பன்னிரண்டு பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 12பே.) கொண்டுள்ளதுடன், கண்டிக் காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் B 472/232 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

மேலேயுள்ளது பின்வரும் காணியின் மீள்நில அளவையாகும்.

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில், யட்டிநுவரவின் மடபலாத்த கோறளையில் பிலிமதலாவவில் அமைந்துள்ள காணியிலிருந்து அஸ்வெத்துமே வத்த எனவழைக்கப்பட்ட காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. பி. லன்சகாரநாயக்க என்பவரினால், தயாரிக்கப்பட்ட 1992, சனவரி 15 ஆந் திகதிய 432 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 2 என அடையாளமிடப்பட்ட அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு: நானு ஓயா; கிழக்கு : அதே வரைபடத்திலுள்ள காணித்துண்டம் இல. 01; தெற்கு : கண்டியிலிருந்து கொழும்பு வரையான பெருந்தெரு மற்றும் ; மேற்கு : அதே வரைபடத்தில் காணித்துண்டம் 3 ; பரப்பளவில் இது, அதன்மீதுள்ள கட்டிடத்துடனும் எல்லாவற்றுடனும் பன்னிரண்டு பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 12பே.) கொண்டுள்ளதுடன், கண்டிக் காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் B 472/232 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

பின்வருவனவுட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல், அதாவது மின்சார வழங்கற் சாதனம், நீர்வழங்கற் சாதனம் மற்றும் தொலைத்தொடர்புச் சாதனம் என்பன, மேற்படி காணித்துண்டுடன் அத்துடன்/அல்லது அதன் மீதுள்ள கட்டிடங்களுடன் இப்போது பொருத்தப்பட்ட அல்லது நிரந்தரமாக இணைக்கப்பட்ட அல்லது இதன்பின்னர் காலத்துக்குக் காலம் பொருத்தப்படக்கூடிய அல்லது நிரந்தரமாக இணைக்கப்படக்கூடிய அசைவற்ற பொறித்தொகுதி, இணைப்புக்கள், பொருத்திகள் மற்றும் சேவைகள் எல்லாவற்றுடனும் ஒவ்வொன்றுடனும்.

பணிப்பாளர்/பிரதான நிறைவேற்றலுவலர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

1-221

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கிளை : பிலியந்தலை
வாடிக்கையாளரின் பெயர் : சமிந்த குஷன் வேக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2014 ஆம் ஆண்டு திசெம்பர் 12 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"சமிந்த குஷன் வேக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் கடப்பாடு உடையதாகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. சார்பில், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஏ. எம். டி. ஏ. கே. அத்திக்காரியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011, திசெம்பர் 20 ஆந் திகதியிடப்பட்ட 1457 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளது ஆதலாலும், 2014, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது எழுபத்தைந்து இலட்சத்து நாற்பதாயிரத்து ஐநூற்று நாற்பத்துநான்கு ரூபா பதின்மூன்று சதம் (ரூ. 75,40,544.13) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ், இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 1457 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட 75,40,544.13 பணத்தொகையை, 2014, நவெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் டி. கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிற்றி கோறளவின் பள்ளே பற்றுவில் உள்ள மஹரகமவின் நகர சபைக்கு உட்பட்ட கங்கொடவில கிராமத்தில் உள்ள வனாத்த வீதி 40/ 1, வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள மில்லகஹாவத்த மறுபெயர் மஹாவத்த மற்றும் கெற்றகெலகஹாவத்த மறுபெயர் மஹாவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள், மற்றும் அத்துடனான எல்லாம். உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. எம். சுனிலினால் தயாரிக்கப்பட்ட 2011.03.08 ஆந் திகதியிடப்பட்ட 1656 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு ஏ என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : வனாத்த வீதியின் வரிமதிப்பீட்டிலக்கம் 36 ஐக் கொண்டுள்ள வளவுகள் ; கிழக்கு :

வனாத்த வீதி ; தெற்கு : வனாத்த வீதியின் வரிமதிப்பீட்டிலக்கம் 44 ; மேற்கு : 3 ஆவது ஒழுங்கையின் வரிமதிப்பீட்டிலக்கம் 16. மற்றும் சொல்லப்பட்ட 1656 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவான இருபது பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ள ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே.ஏ.எல்.ரி.ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

1- 328/1

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கிளை : பாணந்துறை
வாடிக்கையாளரின் பெயர் : பிரியந்த ட்ரேடிங் எஜன்சீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2014 ஆம் ஆண்டு திசெம்பர் 12 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"பிரியந்த ட்ரேடிங் எஜன்சீஸ் (பிறைவேட்) லிமிட்டெட் கடப்பாடு உடையதாகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. சார்பில், பாணந்துறை பிரசித்த நொத்தாரிச பீ. வி. என். டபிள்யூ. பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011, நவெம்பர் 14 ஆந் திகதியிடப்பட்ட 3687 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளது ஆதலாலும், 2014, நவெம்பர் 10 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது அறுபத்தாறு இலட்சத்து பதினெட்டாயிரத்து தொண்ணூற்று ஒன்பது ரூபா நாற்பத்து நான்கு சதம் (ரூ. 66,18,099.44) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ், இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 3687 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட 66,18,099.44 பணத்தொகையை, 2014, நவெம்பர் 11 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் பீ. முத்துக்குமாரண வினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப் படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் உள்ள பாணந்துறை தொட்டமுனவின் பாணந்துறை தல்பிற்றி தெபடவில் உள்ள பாணந்துறை நகர சபை எல்லைக்கு உட்பட்ட பாணந்துறை பற்றியாவில் உள்ள அரம்படதெனியாவத்தவின் காணித்துண்டு பி என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். சி. ஜி. பர்ணாண்டோவினால் தயாரிக்கப்பட்ட 2000, செத்தெம்பர் 25 மற்றும் 28 ஆந் திகதிகள் இடப்பட்ட 2706 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணிதுண்டு பி1 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. வி. எஸ்.பர்ணாண்டோவினால் தயாரிக்கப்பட்ட 2000, மாச்சு 9 ஆந் திகதியிடப்பட்ட 796 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டுகள் மற்றும் ஏ மற்றும் சி ; கிழக்கு : வீதி பெருந்தெரு ; தெற்கு : ஸ்ரீ லங்கா டெலிகொம் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் உரிமை கோரப்படும் சொல்லப்பட்ட 2706 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு பி2 ; மேற்கு : மடன்கஹாஓவிற்ற மற்றும் பம்பிகஹஓவிற்ற மறுபெயர் பக்மீகஹாவத்த அத்துடன், சொல்லப்பட்ட 2706 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவான பத்தொன்பது தசம் சைபர் ஒன்பது பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 19.09பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ள ஆதனம். பாணந்துறை காணிப் பதிவகத்தில் எப் 508/22 என்ற தலைப்பின் கீழ்பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே.ஏ.எல்.ரி.ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

1- 328/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.